**Judicial Form No.**53
(See Rule 42)
**DEPOSITION OF WITNESSES**
(**Chapter XXII**, **Cr.P.C.**)
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SULUR.**

Calendars
Miscellaneous
Preliminary Register
Sessions
} Case No. CC 42 of 2023

Depositions of PW -3 witness for ________ { Prosecution / Defence / Court

Name : கிராந்திகுமார்

Father's Name : த/பெ. கலைச்செல்வன்

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 07th **day of August** 2024.

**(அரசு வழக்கறிஞர் ஆஜர். எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர் இல்லை. போலீசார் சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினார்கள்)**

**முதல்விசாரணை**

1. நான் தற்போது பாப்பம்பட்டியில் வசித்து தனியார் நிறுவனத்தில் வேலை பார்க்கிறேன்.

2. கடந்த 12.07.2021 ம் தேதியன்று மாலை சுமார் 6 மணியளவில் நான் வீட்டில் இருந்தபோது கீழே சத்தம் கேட்டது. அதனால் நான் வெளியில் வந்த பார்த்தபோது பக்கத்துவீட்டு காரருடைய செயினை பின்னாடி வந்த யாரோ ஒருவர் பறித்து விட்டு சென்றது தெரியவந்தது. செயினை பறித்து விட்டு வேலி ஏறி ஓடியவன் கீழே விழுந்து

அவனுக்கு அடிபட்டு விட்டதால் எங்கள் வீட்டின் அருகில் இருந்தவர்கள் அவனை பிடித்து விட்டார்கள்.

3. காசு போடும் 3 பவுன் தங்க செயினை பறித்ததாக கூறினார்கள். அதன்பின்னர் செயினை பறித்தவரை மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தோம். அதன்பின்னர் செயினை பறிகொடுத்தவரின் கணவரும் நானும் காவல் நிலையத்திற்கு சென்றோம். படிவம் 91 ல் உள்ள 2 வது சாட்சி கையொப்பம் என்னுடையதாகும். செயினை கொடுத்ததற்காக அந்த கையொப்பத்தை பெற்றார்கள். என்னுடன் அப்பெண்மணியின் கணவரும் கையொப்பம் செய்துள்ளார். என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் பார்வைமகசரில் உள்ள 2 வது சாட்சி கையொப்பம் என்னுடையதாகும். அதன்பிறகு காவல் நிலையத்திற்கு என்னை அழைத்தார்கள். என்ன நடந்தது என்று விசாரித்தற்கு கையொப்பம் பெற்றார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**(அரசு தரப்பில் சாட்சியை பகுதி பிறழ் சாட்சியாக அறிவிக்குமாறு கோரியதன் பேரில் சாட்சி பகுதி பிறழ் சாட்சியாக அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை)**

கடந்த 13.07.2021 ம் தேதி காலை 6 மணிக்கு புகார்தாரர் சாரதா ப்ரீத்தா சம்பவ இடத்தை அடையாளம் காட்ட அங்கிருந்த போலீசார் சம்பவ இடத்தினை பார்வையிட்டு பார்வைமகசர் மற்றும் மாதிரிவரைபடம் தயார் செய்ததார்கள் என்றும், அதற்கு சாட்சியாக பார்வைமகசரில் கையொப்பம் செய்துவிட்டு தற்போது விசாரித்தற்காக சாட்சி கையொப்பம் செய்தேன் என்று மாற்றி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை**

(எதிரி ஆஜர். சாட்சியை வருவது குறித்த தகவல் வழக்கறிஞருக்கு தெரிவிக்கப்பட்டது. இன்றைய எதிரி அவருடைய வழக்கறிஞரை தொலைபேசியில் தொடர்பு கொண்டதற்கு வழக்கறிஞர் அழைப்பை ஏற்கவில்லை தெரிவித்தார். இருப்பினும் **வினோத்குமார் என்ற வழக்கில் மாண்புமிகு உச்ச நீதிமன்ற தீர்ப்பில் சாட்சிகளை அன்றைய தினமே குறுக்கு விசாரணை செய்யவேண்டும்** என்றும் உத்தரவிட்டிருப்பதை எடுத்து கூறியதற்கு ஆஜர் எதிரியும் குறுக்குவிசாரணை செய்யவில்லை என திறந்த நீதிமன்றத்தில் தெரிவித்துவிட்டார். எனவே அ.சா.3 ன் சாட்சியம் முடிக்கப்பட்டது)

**மறுவிசாரணை** இல்லை

G RUBANA Digitally signed by G RUBANA Date: 2024.08.07 15:44:53 +0530

**Signature of Witness**

**நீதித்துறை நடுவர்**

**சூலூர்**

**Judicial Form No.**53
(See Rule 42)
**DEPOSITION OF WITNESSES**
(**Chapter XXII**, **Cr.P.C.**)
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SULUR.**

Calendars
Miscellaneous
Preliminary Register
Sessions

Case No. CC 42 of 2023

Depositions of PW - 4 witness for ________ Prosecution / Defence / Court

Name : சிவா

Father's Name : த/பெ. நடேசன்

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 07th **day of August** 2024.

**(அரசு வழக்கறிஞர் ஆஜர். எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர் இல்லை. போலீசார் சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினார்கள்)**

முதல்விசாரணை

1. நான் தற்போது பாப்பம்பட்டியில் வசித்து முதுநிலை பட்டப்படிப்பு படித்து வருகிறேன். புகார்தாரர் அசா.1 மற்றும் அவருடைய கணவர் அசா.2 ஆகியோரை எனக்கு தெரியும். ஆஜர் எதிரியை தெரியும்.

2. கடந்த 12.07.2021 ம் தேதியன்று மாலை சுமார் 6 மணியளவில் நான் வீட்டிற்கு முன்னர் நின்று கொண்டிருந்தபோது எங்கள் வீட்டிற்கு பக்கத்தில் வசித்து வந்த அந்த அக்கா பேருந்து நிறுத்ததில் இருந்து நடந்து வந்து கொண்டிருந்தார். அப்போது அவருக்கு பின்னால் வந்த ஆஜர் எதிரி அந்த அக்காவின் செயினை பறித்து கொண்டு என்னுடைய

வீட்டை தாண்டி ஓடினார். அவர் எங்கள் வீட்டிற்கு தெற்கு பக்கம் உள்ள தோட்டத்திற்கு போடப்பட்டிருந்த வேலியை ஆஜர் எதிரி ஏறி குதித்த போது கீழே விழுந்துவிட்டார்.

3. எதிரியை துரத்தி சென்ற நானும் ஆறுமுகம் என்ற அண்ணனும் எதிரியை பிடித்து கொண்டோம். ஏறி குதித்து கீழே விழுந்ததில் எதிரியால் ஓடமுடியவில்லை. எதிரி அந்த அக்காவின் தாலி கொடியை பறித்திருந்தார். எடை சரியாக தெரியவில்லை. 3 சவரண் இருக்கும். அந்த செயினை அந்த அக்காவிடம் கொடுத்தோம். எதிரியை எங்கள் பகுதியை சேர்ந்த கிராந்திகுமார் என்பவர் மருத்துவமனைக்கு அழைத்து சென்றார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

(எதிரி ஆஜர். சாட்சியை வருவது குறித்த தகவல் வழக்கறிஞருக்கு தெரிவிக்கப்பட்டது. இன்றைய எதிரி அவருடைய வழக்கறிஞரை தொலைபேசியில் தொடர்பு கொண்டதற்கு வழக்கறிஞர் அழைப்பை ஏற்கவில்லை தெரிவித்தார். இருப்பினும் **வினோத்குமார் என்ற வழக்கில் மாண்புமிகு உச்ச நீதிமன்ற தீர்ப்பில் சாட்சிகளை அன்றைய தினமே குறுக்கு விசாரணை செய்யவேண்டும்** என்றும் உத்தரவிட்டிருப்பதை எடுத்து கூறியதற்கு ஆஜர் எதிரியும் குறுக்குவிசாரணை செய்யவில்லை என திறந்த நீதிமன்றத்தில் தெரிவித்துவிட்டார். எனவே அ.சா.4 ன் சாட்சியம் முடிக்கப்பட்டது)

**மறுவிசாரணை** இல்லை

G RUBANA Digitally signed by G RUBANA Date: 2024.08.07 15:45:05 +0530

**Signature of Witness**

நீதித்துறை நடுவர்

சூலூர்

**Judicial Form No.**53
(See Rule 42)
**DEPOSITION OF WITNESSES**
(**Chapter XXII**, **Cr.P.C.**)
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SULUR.**

| | | |
|---|---|---|
| Calendars<br>Miscellaneous<br>Preliminary Register<br>Sessions | } | Case No. CC 42 of 2023 |

Depositions of PW - 5 witness for ________ { Prosecution / Defence / Court

Name : ஆறுமுகம்

Father's Name : த/பெ. நடராஜ்

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 07th **day of August** 2024.

**(அரசு வழக்கறிஞர் ஆஜர். எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர் இல்லை. போலீசார் சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினார்கள்)**

முதல்விசாரணை

1. நான் தற்போது பாப்பம்பட்டியில் வசித்து கட்டுமான தொழில் செய்து வருகிறேன். புகார்தாரர் சாரதா ப்ரீத்தா அசா.1 மற்றும் அவருடைய கணவர் சுபாஷ் அசா.2 ஆகியோரை எனக்கு தெரியும். ஆஜர் எதிரியை தெரியும்.

2. கடந்த 12.07.2021ம் தேதியன்று மாலை சுமார் 06.30 மணியளவில் நான் அயோதிபுரத்தில் உள்ள என்னுடைய அண்ணன் அப்பாதுரையின் வீட்டிற்கு முன்னர் நின்று கொண்டிருந்தபோது அந்த தெருவை சேர்ந்த சிவா திருடன் திருடன் என்று சத்தம் போட்டு கொண்டே ஆஜர் எதிரியை துரத்தி கொண்டு வந்தார். அப்போது ஆஜர் எதிரி

தென்னந்தோப்பிற்கு போடப்பட்ட வேலியை ஏறி குதித்தார். உடனே நான் சிவாவிடம் சேர்ந்து எதிரியை துரத்தி சென்றேன். ஆஜர் எதிரி கம்பி வேலியை ஏறி குதிக்கும் போது கீழே விழுந்துவிட்டார். உடனே நாங்கள் எதிரியை பிடித்து கொண்டோம். அப்போது ஆஜர் எதிரி கையில் அறுந்த நிலையில் தாலி செயினை காசுடன் சேர்த்து வைத்திருந்தார். அதன் எடை 3 லிருந்து 3-1/2 பவுன் இருக்கும்.

3. பின்னர் செயினை அந்த பெண்ணிடம் கொடுத்தோம். ஆஜர் எதிரியை மருத்துவமனைக்கு அத்தெருவை சேர்ந்த கிராந்திகுமார் அழைத்து சென்றார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

(எதிரி ஆஜர். சாட்சியை வருவது குறித்த தகவல் வழக்கறிஞருக்கு தெரிவிக்கப்பட்டது. இன்றைய எதிரி அவருடைய வழக்கறிஞரை தொலைபேசியில் தொடர்பு கொண்டதற்கு வழக்கறிஞர் அழைப்பை ஏற்கவில்லை தெரிவித்தார். இருப்பினும் **வினோத்குமார் என்ற வழக்கில் மாண்புமிகு உச்ச நீதிமன்ற தீர்ப்பில் சாட்சிகளை அன்றைய தினமே குறுக்கு விசாரணை செய்யவேண்டும்** என்றும் உத்தரவிட்டிருப்பதை எடுத்து கூறியதற்கு ஆஜர் எதிரியும் குறுக்குவிசாரணை செய்யவில்லை என திறந்த நீதிமன்றத்தில் தெரிவித்துவிட்டார். எனவே அ.சா.5 ன் சாட்சியம் முடிக்கப்பட்டது)

**மறுவிசாரணை** இல்லை

G RUBANA

Digitally signed by G RUBANA
Date: 2024.08.07 15:45:15 +0530

**Signature of Witness**

**நீதித்துறை நடுவர்**

**சூலூர்**

**Judicial Form No.**53
(See Rule 42)
**DEPOSITION OF WITNESSES**
(**Chapter XXII**, **Cr**.**P**.**C**.)
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SULUR.**

| | |
|---|---|
| Calendars<br>Miscellaneous<br>Preliminary Register<br>Sessions | Case No. CC 42 of 2023 |

| | |
|---|---|
| Depositions of PW - 6 witness for ________ | Prosecution<br>Defence<br>Court |

Name : சசிக்குமார்

Father's Name : த/பெ. நடராஜன்

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 07th **day of August** 2024.

**(அரசு வழக்கறிஞர் ஆஜர். எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர் இல்லை. போலீசார் சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினார்கள்)**

**முதல்விசாரணை**

1. நான் தற்போது சூலூரில் வசித்து அரசு கேபிள் டிவி ஒப்பந்ததாரராக செய்து வருகிறேன். என்னிடம் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2 வது சாட்சி கையொப்பம் என்னுடையதாகும்.

2. கடந்த 17.03.2021 ம் தேதியன்று காலை 06.30 மணியளவில் சூலூர் தனியார் மருத்துவமனைக்கு என்னுடைய நண்பரை பார்ப்பதற்காக சென்றிருந்தேன். அப்போது அங்கு வந்த போலீசார் செயின் பறித்த ஒரு வரை மருத்துவமனையில் சேர்த்திருப்பதாக கூறினார்கள். வெளியில் வந்தவுடன் ஒருவரை கைது செய்திருப்பதாகவும் அதற்கு

சாட்சியாக கையொப்பம் செய்யுமாறு கூறினார்கள். அதன்பின்னர் காவல் நிலையம் சென்று கையொப்பம் செய்து கொடுத்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**(அரசு தரப்பில் சாட்சியை பகுதி பிறழ் சாட்சியாக அறிவிக்குமாறு கோரியதன் பேரில் சாட்சி பகுதி பிறழ் சாட்சியாக அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை)**

கடந்த 13.07.2021 ம் தேதி காலை 6 மணிக்கு நானும் என்னுடைய நண்பர் மணிவேல் என்பவரும் சூலூர் பாலாஜி மருத்துவமனைக்கு வந்தபோது அங்கிருந்த போலீசார் ஆஜர் எதிரியை கொள்ளை வழக்கில் கைது செய்துள்ளதாகவும் அவர் தாமாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை எங்கள் முன்னிலையில் பதிவு செய்தார் என்றும் அதற்கு சாட்சியாக நான் கையொப்பம் செய்து விட்டு தற்போது விசாரித்தற்காக காவல் நிலையத்தில் வைத்து சாட்சி கையொப்பம் செய்தேன் என்று மாற்றி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை**

(எதிரி ஆஜர். சாட்சியை வருவது குறித்த தகவல் வழக்கறிஞருக்கு தெரிவிக்கப்பட்டது. இன்றைய எதிரி அவருடைய வழக்கறிஞரை தொலைபேசியில் தொடர்பு கொண்டதற்கு வழக்கறிஞர் அழைப்பை ஏற்கவில்லை தெரிவித்தார். இருப்பினும் **வினோத்குமார் என்ற வழக்கில் மாண்புமிகு உச்ச நீதிமன்ற தீர்ப்பில் சாட்சிகளை அன்றைய தினமே குறுக்கு விசாரணை செய்யவேண்டும்** என்றும் உத்தரவிட்டிருப்பதை எடுத்து கூறியதற்கு ஆஜர் எதிரியும் குறுக்குவிசாரணை செய்யவில்லை என திறந்த நீதிமன்றத்தில் தெரிவித்துவிட்டார். எனவே அ.சா.6 ன் சாட்சியம் முடிக்கப்பட்டது)

**மறுவிசாரணை** இல்லை

G RUBANA

Digitally signed by G RUBANA
Date: 2024.08.07 15:45:23 +0530

**Signature of Witness**

**நீதித்துறை நடுவர்**

**சூலூர்**